வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 11/2019

வழக்கு சாட்சி LW4 /PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாந்தி | ஜாதி | |
| கணவர்/தந்தை | கிருபாகரன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 67 |

தேதி 13.02.2025

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் லட்சுமிபுரம் பகுதியில் வசித்து வருகிறேன். நான் சங்கரலிங்கனார் தெருவில் குடியிருந்தபோது எனது வீட்டின் எதிர்வீட்டில் தாரணி என்பவர் குடியிருந்தார். ஆஜர் எதிரி சுஜித்ரா என்பவர் தாரணி வீட்டிற்கு அடிக்கடி வந்து தன் மகனுக்கு உடல் நிலை சரியில்லை என்றும், அதற்காக தாரணியிடம் இருந்து பணம் மற்றும் நகைகளை பெற்றுச்செல்வார். நான் இதை நேரடியாக பார்க்கவில்லை. தாரணிக்கு திருமணம் நெருங்கியதால் தாரணி சுஜித்ராவிடம் நகைகளை திரும்ப கேட்டபோது அதை திருப்பி கொடுக்கவில்லை. இதுகுறித்து தாரணி புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

தாரணி எங்கு வசித்தார் என்றால் எனது வீட்டிற்கு எதிர் வீட்டில். எந்த வருடம் வந்தார்கள் என்றால் நான் வெளியூரில் இருந்தேன். அதனால் எனக்கு தெரியாது. அதற்கு

முன்பு எந்த வீட்டில், எந்த முகவரியில் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. சுஜித்ராவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு மகன்கள். தாரணி எதிரிக்கு பணம், நகை கொடுத்தார்கள் என்பது யார் கூறினார்கள் என்றால் எனக்கே தெரியும். எத்தனை பவுன், எவ்வளவு பணம் என்றால் குறிப்பிட்டு தெரியாது. எத்தனை தடவை வந்தார்கள் என்றால் அடிக்கடி வருவார்கள். எவ்வளவு பணம், எவ்வளவு நகை என்று தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரர் எதிரிக்கும் என்ன பிரச்சனை நடந்தது என்றால் காசால் பிரச்சனை நடந்தது. நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. காவல் நிலையம் செல்லாததால் விசாரணை செய்யவில்லை என்றால் வீட்டில் வந்து விசாரித்து கையொப்பம் பெற்றார்கள். நான் கையொப்பம் செய்ததில் என்ன எழுதியிருந்தது என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடக்கும்போது எதிரி எனது வீட்டிற்கு எதிரி இல்லை என்றாலும், தாரணி எனது வீட்டிற்கு வரும்போது கூறியதுதான் தெரியும் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**